# பரம்பிக்குளம் வட்டார மலசர் வாழ்வியல்

## Life of Malasar of Parambikulam Regin

**பா.அஞ்சலி**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

**B.Anjali,** Ph.D Research Scholar Department of Tamil, N.G.M College, Pollachi.

ORCID ID: https://orcid.org/0009-0008-1238-8619

**DOI : 10.5281/zenodo.10004946**

**Abstract**

Thousands of years have passed since the birth of the world. Until today, it has not been possible to accurately predict its origin. Anthropologists say that the primitive man certainly would not have lived together in a group. The primitive man wandered alone in the forests and hills, giving priority to the basic emotions like hunger, lust, and sleep like animals. He was wandering as a nomad without civilization. Eventual-ly, the human race saw the benefit of group life and stayed in the natural resources and water bodies. Next he started living by setting up residences. The human society has grown from the tribal system. These tribal people live their lives in harmony with nature.People who live a normal life without luxury,no matter how developed the his-tory is or how much science has developed they still continue to live their traditional life. Despite being denied permission to enter the forest area completely, they are liv-ing a peaceful and healthy life in the places reserved for them, despite facing crises, disasters and destruction at various times, they lead a life of pride that has not changed. This article examines family structure: food system, beliefs, livelihoods.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றுவரை அதன் தோற்றம் குறித்து மிகச் சரியாகக் கணித்துச்சொல்ல இயலவில்லை. ஆதிகால மனிதன் நிச்சயமாக ஒரு குழுவாக இணைந்து வாழ்ந்திருக்கமாட்டான் என்பார்கள் மானிடவியலாளர்கள். விலங்குகளைப்போலப் பசி, காமம், உறக்கம் போன்ற அடிப்படை உணர்ச்சிகளுக்கு முதன்மையளித்துக் காடுகளிலும் மேடுகளிலும் தன்னந்தனியாக அலைந்து திரிந்தவன் ஆதிகால மனிதன். நாகரிகமில்லாமல் நாடோடியாக அலைந்து திரிந்தவன் நாளடைவில் குழு வாழ்க்கையின் பயன் கண்ட மனித இனம் இயற்கை வளம் கொண்ட பகுதிகளில் தங்கியும், நீர் நிலைகளை அடுத்து வாழிடங்களை அமைத்துக் கொண்டும் வாழத் தொடங்கினான். அப்படிப்பட்ட பழங்குடி அமைப்பிலிருந்து வளர்ந்து வந்தது தான் மனித

சமுதாயம். இப்பழங்குடி மக்கள் இயற்கையோடு தங்களது வாழ்வினை இணைந்து ஆடம்பரம் இல்லாத இயல்பு வாழ்க்கை வாழ்பவர்கள். நாகரிகம் எவ்வளவு வளர்ச்சி பெற்றிருந்தாலும் விஞ்ஞானம் வளர்ந்திருந்தாலும் தங்களது மரபு ரீதியான வாழ்க்கையைத்தான் இன்னும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். காட்டுப் பகுதிக்குள் முழுமையாகச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் நிம்மதியான, சுகாதாரமான வாழ்வை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பல்வேறு, காலங்களில் நெருக்கடிகளையும், துயரங்களையும், அழிவையும் சந்தித்தாலும், மரபு மாறாத பெருமைக்குரிய வாழ்வினையே மேற்கொள்கின்றனர். இச்சமூகத்தின் தொழில்கள், மருத்துவம், குடும்ப அமைப்பு, உணவு முறை, நம்பிக்கைகள், வாழ்வாதாரங்கள் ஆகியவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

ஒரு காலத்தில் காலம் இன்னது என்று குறிப்பிடமுடியாத சூழலில் மக்கள் அநாகரிகமாக வாழ்ந்தது உண்டு.உடையில்லாமல்,வீடு இல்லாமல் இயற்கையாகக் கிடைத்த உணவுகளை உண்டு வாழ்ந்தார்கள்.

நாகரிகம் இல்லாமல் வாழ்ந்த அக்காலத்தில் அவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்தது கூட இல்லை. எங்கே, உணவு கிடைக்கின்றதோ எங்கே தங்குவதற்கு மர நிழலும் மலைக் குகையும் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் ஓடி ஆடீத் திரிந்தனர். அக்காலத்தில் அவர்களிடம் தனித் தனிக் குடும்ப வாழ்க்கை கூட இருந்ததில்லை. அவரவர்கள் மனம் போனபடி ஆண் பெண்கள் கூடி வாழ்ந்தனர். பிற்காலத்தில் தான் அவர்களிடம் தனித் தனிக் குடும்ப வாழ்வு ஏற்பட்டது. இப்படி வாழ்ந்தவர்கள் தன் மனைவி, தன் கணவன், தன் பிள்ளைகள் என்ற உணர்வு ஏற்பட்ட பிறகு தான் அவர்கள் தனித் தனிக் குடும்பங்களாகப் பிரிந்து வாழத் தொடங்கினர். அப்பொழுது, இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருளை உற்பத்தி செய்யவும் தொடங்கினர். நல்ல நீர்வளம் நிலவளம் உள்ள பகுதிகளிலே நிலைத்து வாழவும் தொடங்கினர். அப்படிப் பட்ட மாற்றங்களைக் கண்ட மக்கள் இடையே வாழக்கூடிய மலையின் மக்களான மலசர் இன மக்களின் வாழ்வியலும் வாழ்வாதாரத்தையும் இக்கட்டுரையில் காணலாம்.

**மலசர்**

பாலக்காடு மற்றும் கோயமுத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் மலசர் இன மக்கள் வசிக்கின்றனர். மலசர் பழங்குடிகள் ஆதிகாலம் தொட்டே மலைகளில் வாழ்ந்து வந்த ஒரு தொல்குடி சமூகத்தின் நேர்வழிச் சந்ததியினர் என்று அறுதியிட்டுக் கூறுவதற்குச் சில இடர்பாடுகள் ஏற்படுகின்றது. மலை மற்றும் மலைசார்ந்த பகுதிகளில் வாழ்வதால் மலசர் என்று அழைக்கப்பட்டாலும் அம்மக்களைத் தொன்றுதொட்டு மலையிலேயே வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சமூகத்தின் நேர்வழிச் சந்ததியினர் என்று உறுதியாகக் கூறுவதற்கு

இயலவில்லை ஏனெனில், கள ஆய்வின்போது கிடைத்த சில தகவல்கள் சிற்சில ஐயங்களுக்கு இடமளிக்கின்றன.

பரம்பிக்குளம் வட்டம் சுங்கத்தில் வசிக்கக்கூடிய மலசர் இனத்தைச் சார்ந்த முருகன், ரங்கன் இருவரும் கூறுகின்றபோது "காமராஜர் ஆட்சியின்பொழுது திருவிதாங்கூரில் இருந்து எங்கள் பெற்றோர்கள் இடம் பெயர்ந்து வந்தார்கள் அப்பொழுது இருந்து இங்குதான் வசித்து வருகிறோம்." "இந்திரா காந்தி திட்டத்தின் கீழ் முக்கால் சென்ட் இடம் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. அதனால் நாங்களும் எங்கள் பிள்ளைகளும் இங்கேயே தங்கிவிட்டோம் என்கின்றனர்." இவர்கள் கூற்றைக் கவனத்தில் கொண்டு இவ்வய்யம் தீர்க்கப்பட்டது. மலசர்கள் ஆதிகாலம் தொட்டு மலைகளில் வாழ்ந்தவர்கள் இல்லை இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்ற முடிவுக்குள்ளாகின்றது.

**மலசர் குலப்பிரிவு**

1. சேடக் கூட்டம்
2. சோளர் கூட்டம்
3. மரம்வெட்டி ராஜா கூட்டம்
4. புளியாம்பதிக் கூட்டம்
5. கொளபித்து கூட்டம்
6. ரெட்டையார் கூட்டம்
7. பண்ணக் கூட்டம்
8. தொய்யங்கூட்டம்
9. வெள்ளக் கூட்டம்
10. மணக்கடவு கூட்டம்
11. கரவெளிக் கூட்டம்
12. வெத்தலக் கூட்டம்
13. வெள்ளாளக் கூட்டம்
14. கரட்டிய கூட்டம்
15. காடர் குலம்
16. சூரிய குலம்

**பழங்குடிகள் வாழ்வாதாரங்கள்**

உயிர் வாழ்வு வாழ ஆதாரமாக இருப்பது வாழ்க்கைத் தொழில், பிழைப்பு. பழங்குடி மக்கள் வாழ்வாதார கூட்டமைப்பின் முதல் பொதுக்குழுக் கூட்டம் (12-12-2020) அன்று நடைபெற்றது.

பழங்குடியின மக்களுக்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பு, வாழ்வாதார மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள பழங்குடி மக்கள் வாழ்வாதாரக் கூட்டமைப்பின் முதல் பொதுக்குழுக் கூட்டம் கோவையில் நடைபெற்றது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள வனம் சார்ந்த மலைப் பகுதிகளில் வசித்து வரும் பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காகவும்,அவர்களின் மேம்பாட்டிற்காகவும், வன உரிமைச் சட்டம் 2006-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. பழங்குடி மக்களுக்கு வனத்தில் நில உரிமை பெற்றுத் தருவதிலும் இயற்கை விவசாய முறைகளில் அதிகமாக உற்பத்திக்கான பயிற்சிகளைக் கொடுப்பதிலும் பழங்குடி மக்களை மாநில அளவில் கட்டமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாகப் பழங்குடி மக்கள் விவசாயப் பூமியில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும்,வனத்திலிருந்து திரட்டி செய்யும் பொருட்களுக்கும்,அதிக வருவாய் தரக்கூடிய சந்தை சங்கிலியை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் இப்போது முனைப்பாக உள்ளது.

**நம்பிக்கைகள்**

"நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும், மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவையே, நம்பிக்கையாக உருவாகின்றன என்று கூறுமளவிற்கு அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதையும் காணமுடிகிறது. மனிதனின் வாழ்வே நம்பிக்கையின் அடிப்படையில் தான் இயங்குகிறது எனக் கூறினால் மிகையாகாது" என்கிறார் சக்திவேல். மலசர் இன மக்கள் யானை முடியைத் திரித்து கயிறு போல் கட்டியிருந்தால் செய்வினை செய்தால் கயிறு தானாகவே அறுந்து விடும் என்கின்றனர்.இறந்தவர்கள் உடலை எரிக்கும் பழக்கம் இல்லை புதைப்பதுதான் வழக்கம், எரித்தால் பாவம் என்கின்றனர். இவர்களுடைய வாழ்வும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் இயங்குகிறது என்றும் கூறலாம்.

**உணவு முறை**

உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தரும் பொருளை உணவென்று கூறுகின்றோம். உணவு என்பது உடலை வளர்ப்பது மட்டுமின்றி உள்ளத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதற்குத் துணைபுரிகின்றது. மனித இனம் உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றையும் அடிப்படைத் தேவையாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு,

மலசர் இன மக்கள் இயற்கையாகக் கிடைக்கும் உணவுகளைப் பெரும்பான்மையாக விரும்பி உண்கின்றனர்.

காட்டுக் கிழங்கு, மூங்கிலரிசி, கீரை போன்றவை இவர்களின் முன்னோர்களின் உணவாக இருந்தது. முள்ளுக்கீரை, சேமக் கீரை, தண்டங் கீரை, குப்பக் கீரை, கோமா கீரை, சுக்கிட்டி கீரை போன்றவை இவர்கள் விளைவிப்பவை. இயற்கையாகக் காடுகளிலும் கிடைக்கக் கூடும் இவ்வகை கீரைகளில் முள்ளுக் கீரையை கொஞ்சம் பருப்பு, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு சேர்த்து வேக வைத்து கடஞ்சு உணவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

ஈந்துக்காய் வெட்டி காய வைத்து ஆட்டுக் கல்லில் போட்டு அரைத்து அதை மூட்டை கட்டி தண்ணீரில் போட்டு விஷத்தை முறித்த பின்பு,அவற்றில் கருப்பு நிறம் வெளியேறிய பிறகு வெள்ளை நிறத்தில் உள்ள சோற்றைப் புளி சட்னி அல்லது தயிர் ஊற்றிச் சாப்பிட்டால் அருமையாக இருக்கும் என்கின்றனர். இயற்கையான சத்தான உணவு என்கின்றனர். பாசி பயிர், தட்டைப் பயிர், மட்டை அரிசிக் கஞ்சி விருப்ப உணவாக உண்கின்றனர்.

**மூங்கில் அரிசி உணவு**

தரையில் சிறு குழி தோண்டி சாணம் இட்டு மெழுகி வைத்துள்ளனர். மூங்கில் அரிசி கிடைக்கும் நாட்களில் அவற்றை அக்குழியில் போட்டு உலக்கை கொண்டு இடித்து அரிசி எடுத்துச் சமைக்கின்றனர். சித்திரை,பங்குனி மாதங்களில் இவ்வரிசி கிடைக்கும் என்கின்றனர்.

**மருத்துவ முறை**

இயற்கை மருத்துவம் தனிச் சிறப்புடையது. பிற மருத்துவ வகைகள் நோயை அப்போதைக்குத் தணிக்கின்றனவே தவிர முற்றிலும் நீக்கி விடுவதில்லை, 'அலோபதி' மருந்துகளில் பக்க விளைவு உண்டு. ஒரு நோய்க்கான மருந்து அந்நோயைத் தீர்க்குமாயின் உடலில் மற்றொரு நோய் உண்டாக இடமேற்படுத்தி விடுகிறது. அது தணிக்க மற்றொரு மருந்து என மருத்துவம் வளர்ந்து செல்கிறது. சித்த மருத்துவம் பக்க விளைவுகள் இல்லாதது. இரத்தின வேலனார் இதனை மிகவும் தெளிவாக,

**"பக்கத் ததெதிர்விளைவு பின்விளை வேதுமிலா**

**தக்க தியற்கை மருந்து"(சி.ம.கு-157)** என்கிறார்.

இதனையே மலசர் இன மக்களும் பின்பற்றுகின்றனர். எதற்கெடுத்தாலும் மருத்துவ மனையினை நாடுவது இல்லை அதற்கு மாறாகக் காடுகளில் கிடைக்கக் கூடிய மூலிகைகளையே பயன்படுத்துகின்றனர்.

வயிற்று வலிக்கு அமுல் பொறி செடி வேர் உரசிக் குடித்தால் வயிற்று வலி குணமாகும். பாடா வேரையும் வயிற்று வலிக்குப் பயன்படுத்துகின்றனர்.

வயிற்றுப் போக்கு-ஈய குண்டன் வேர் உரசிக் குடித்தால் குணமாகும்.

முன்பு பிரசவம் வீட்டிலேயே பார்த்துக் கொண்டனர். வாயில் முடியைக் கவ்வச் செய்து கத்தாமல் கையையும், காலையும் பிடித்துப் பிரசவம் பார்த்தனர்.

தேள் கொட்டினால், பாம்பு விசம் இறக்க நாக தாளி வேர் அரைத்துக் குடித்தாலும் சரி ஆகுமாம். அருவாளை வாயில் வைத்துச் சப்பினாலும் விஷம் இறங்கி விடும் என்கின்றனர்.

அட்டை கடிக்காமல் இருக்க _வேப்பெண்ணெய்யில் மூக்கு பொடி கலந்து தேய்த்தால் அட்டை கடிக்காது. அட்டை கடித்தாலும் அதே மருத்துவம் தான் பயன்படுத்துகின்றனர்.

**தொழில்கள்**

புவியில் மனிதர்களின் தொழிலைப் பல்வேறு இடங்களில் கிடைக்கும் வள ஆதாரங்களே தீர்மானிக்கின்றன. அவற்றுள், உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், விவசாயம் பார்த்தால், வணிகம் போன்ற பல தொழில்கள் அடங்கும். அவற்றுள், மலசர் இன மக்கள் வனத்திற்குள்ளே கிடைக்கக் கூடிய தொழில்களையே செய்கின்றன.

1. பஞ்சாயத்து வேலை செய்பவர்களுக்கு வருடத்திற்கு 200 நாட்கள் வேலை உண்டு.
2. முன்னோர்கள் காடுகளில் கம்பு, சோளம் போன்றவற்றைப் பயிரிட்டனர் தற்பொழுது அதற்கு இடம் இல்லை. விவசாயம் செய்வதற்கான இடங்கள் தற்பொழுது இல்லாததால் வீடுகளுக்கு அருகிலேயே கீரைகளையும், குறுமிளகு செடிகளும், துவரையும் நட்டு விவசாயம் செய்து பயன்படுத்துகின்றனர்.
3. தேன் எடுத்தலும், மீன் பிடி தொழிலும் செய்கின்றனர். தேன் எடுத்து வனத்துறையிடம் கொடுக்கின்றனர் அதனை அவர்கள் சுத்தம் செய்து விற்கின்றனர்.
4. ஆரம்பத்தில் இவர்கள் தொழில் மூங்கில் மரம் வெட்டுவதும் அதனை விற்பனை செய்வதும், காடுகளில் கிடைக்கக் கூடிய தேன், கிழங்கு போன்றவற்றையும் எடுத்து விற்பனை செய்தனர்.
5. வனத்துறைகளில் பெரும்பான்மையான மலசர் இன மக்கள் வேலை செய்கின்றனர்.
    - *வனப் பாதுகாவலர், விலங்குகள் பாதுகாவலர், வனப் பார்வையாளர் எனத் தனித் தனியாக உள்ளனர்.
    - வனத்துறை அலுவலகங்களைச் சுத்தம் செய்யும் வேலை, தோட்டப் பராமரிப்பு வேலை போன்றவற்றையும் செய்கின்றனர்.
    - சுற்றுலா பயணிகள் தங்கும் மனைகளுக்கு விருந்தினர்கள் வந்தால் உணவு, பானங்கள் போன்றவை செய்து தரும் பணி செய்கின்றனர்.

- கைவினைப் பொருட்கள் கூடம் அமைத்து அரசே இவர்களுக்குக் கைவினைப் பொருட்கள் செய்ய கற்றுக் கொடுத்து வேலைக்கு அமர்த்தியுள்ளனர். இவ்வாறு மலசர் இன மக்கள் தன் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

**அரசினால் கிடைக்கும் சலுகைகள்**

- பரம்பிக்குளம் வட்டத்தில் சுங்கம் காலனியில் வசிக்கக் கூடிய மலசர் இன மக்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுத்த சலுகைகள் பின்வருமாறு.
- குடும்பத்தில் ஒருவர் அல்லது இருவருக்கு வனத்துறையில் வேலைவாய்ப்பு.
- குடும்பம் ஒன்றிக்கு 35 கிலோ அரிசி, சர்க்கரை, மண்ணெண்னை நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்றது.
- ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
- ஐந்தாம் வகுப்பு வரை பள்ளிகள் அமைத்துத் தந்துள்ளனர்.
- தற்பொழுது மின்சார வசதிகள் வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.
- ATM வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது.
- வனத்துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு ஐந்தாயிரம் முதல் பத்தாயிரம் வரை கடன் தரப்பட்டுள்ளது.
- கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சி வழங்கியுள்ளனர்.

**முடிவுரை**

பழங்குடி மக்களுள் ஒருவரான மலசர் இன மக்கள் தன் வாழ்வில் அன்றாடம் செய்யக்கூடிய செயல்கள்,அவர்களின் தொழில்கள்,மருத்துவம்,உணவு முறை ஆகியன சற்று தனித்துவமாகக் காணப்படுவதை இக்கட்டுரை வழி உணர முடிகின்றது.பிற மலையின மக்களைக் காட்டிலும் அரசு மலசர் இன மக்களுக்கு வாழ்வாதாரமாகப் பல்வேறு சலுகைகள் தந்துள்ளமை உணர முடிகின்றது.இவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு எவை தேவையானவை என்று உணர்ந்து அதற்கான வழிகளில், முன்னேற்றப் பாதையில் செல்வதனை அவர்களின் தொழில்களின் வழி அறிய முடிகிறது.காடுகளில் சுற்றித் திரிந்தவர்கள் அவற்றையே அரசாங்கத்தின் உதவியால் வேலையாக செய்து வருகின்றனர்.அரசின் மூலம் பல்வேறு சலுகைகள் கிடைத்தாலும் தங்களுடைய வாழ்க்கையில் சிறு சிறு மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தாலும் பழமையை இன்னும் பின்பற்றி வருவதனை இக்கட்டுரை வழி அறிய முடிகின்றது.

**துணை நுற்பட்டியல்**

1. சித்த மருத்துவ குறள் நூல், சி. இரத்தின வேலனார், இராசலக்குமி பதிப்பகம், சென்னை – 600118,முதற்பதிப்பு - 2001.
2. மலையகத் தமிழர் வரலாறு, சாரல் நாடன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் முதற் பதிப்பு - ஜூலை 2011, சென்னை - 600 098.

3. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சாமி சிதம்பரனார்,மணிவாசகர் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு - டிசம்பர் 2000.
4. இலக்கியங்கள் காட்டும் உணவுமுறை, அ.ரோகினி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600127, முதற்பதிப்பு - 2011.


## Reference


1. Siddha Medicinal Textbook, S.Raththina Velanar, Rasalakshmi Pathippagam, Chennai – 600118, First Edition - 2001
2. Malaiyaga Tamilar,Charles Nathan,New Century Book House,Chennai – 600 098, First Edition – July 2011.
3. Fetal life and Development, Samy Chithambaranar, Manivasagar Publication, Chennai, First Edition – December 2000.
4. Diet as Shown by Literature,A.Rohini,New Century Book House,Chennai – 600 127First Edition – 2011.
5. C.Ratna Velanar,Rachalakshmi Publishing House,Chennai – 600118,First Edition – 2001.


## தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

**அஞ்சலி. பா " பரம்பிக்குளம் வட்டார மலசர் வாழ்வியல்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 1-8

## Cite this Article in English

**Anjali. B " Life of Malasar of Parambikulam Regin"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 1-8